# சென்னை மெட்ரோ ரயில்வேக்கு விருது

சென்னை, நவ.18–
சென்னை மெட்ரோ ரயில் நிர்வாகத்துக்கு ''பாராட்டத்தக்க முன்முயற்சி விருது' வழங்கப்பட்டது.

மத்திய வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற விவகார அமைச்சகம் சார்பில், லக்னோவில் 12வது கருத்தரங்கம் கடந்த 15ம் தேதி முதல் 17ம் தேதி வரை 3 நாட்கள் நடைபெற்றது. இதில் சிறந்த நகர்ப்புற வெகுஜன போக்குவரத்து திட்ட பிரிவின் கீழ் 'பாராட்டத்தக்க முன்முயற்சி' விருது சென்னை மெட்ரோ ரயில் நிர்வாகத்துக்கு வழங்கப்பட்டது. இந்த விருதை உ.பி. துணை முதல்வர் தினேஷ் சர்மா, சென்னை மெட்ரோ ரயில் நிர்வாக இயக்குனர் பங்கஜ் குமார் பன்சாலிடம் வழங்கினார்.